# ஈஸ்டர் தாக்குதலுக்கு சர்வதேச விசாரணையைக் கோருகிறார் ஜி.எல். பீரிஸ் தமிழ் மக்களுக்கும் சர்வதேச உதவியுடன் நீதி பெற அவர் முன்வரவேண்டும்!


## வடமாகாகண முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் தெரிவிப்பு

ஈஸ்டர் தாக்குதலுக்கு சர்வதேச விசாரணையைக் கோரும் ஜி.எல். பீரிஸ், தமிழ் மக்களுக்கும் சர்வதேச உதவியுடன் நீதியைப் பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும்!, என வடமாகாகண முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் விசாரணைக்கு 'சர்வதேச ஒத்துழைப்பும் கண் காணிப்பும் அவசியம்' என்ற பீரிஸ் அவர்களின் கருத்தை மகிழ்வுடன் வரவேற்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

2




மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 16 திங்கட்கிழமை 29.04.2024 கதிர் 244







# வேலைவாய்ப்பு கோரி யாழில் பட்டதாரிகள் இன்று போராட்டம்

அனைத்து பட்டதாரிகளுக்கும்பாரபட்சமின்றி வேலைவாய்ப்பை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்னால் இன்று காலை இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, "ஏமாற்றாதே ஏமாற்றாதே பட்டதாரிகளை ஏமாற்றாதே, வேண்டும் வேண்டும் வேலை வேண்டும், நாசம் நாசம் கனவுகள் நாசம்" உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை போராட்டக்காரர்கள் எழுப்பினர்.

மேலும், "பல வருட கனவு வெறும் கனவாகவே போய் விடுமா?, எமக்கான வாழ்க்கையை நாம் எப்போது வாழ்வது?, அழிக்காதே அழிக்காதே எமது எதிர்காலத்தை அழிக்காதே, வயது ஏறுது வாழ்க்கை போகுது வேலை வேண்டும் உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் அவர்கள் தங்கியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து நீண்ட காலமாக வேலையில்லாமல் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் பாதிப்புக்களைச் சுட்டிக்காட்டி தமக்கான வேலைவாய்ப்பை வழங்க வேண்டும் என்று

2

# மைத்ரிபால வழங்கிய நியமனங்களை நிமல் சிறிபால தரப்பு இரத்து செய்தது!



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் வழங்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் நியமனங்கள் பலவற்றை இரத்து செய்வதற்கு தற்போது கட்சியில் அதிகாரத்தை கைப்பற்றியுள்ள நிமல் சிறிபால டி சில்வாவின் அணியினர் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மைத்ரிபால ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் நியமனங்கள் தன்னிச்சையாகவே மேற்கொள்ளப்பட்டதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, மைத்ரிபாலவின் காலத்தில் அநீதி இழைக்கப்பட்ட பலம் வாய்ந்த கட்சியின் செயற்பாட்டாளர்கள்

2

# ஊழியர் சேமலாப நிதியத்தின் வட்டியை 9 வீதத்திலிருந்து 13 வீதமாக அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது

## நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய



ஊழியர் சேமலாப நிதியத்தின் வட்டி வீதத்தை 9 சதவீதத்திலிருந்து 13 சதவீதமாக அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ஊழியர் சேமலாப நிதியத்திலுள்ள நிதி இருப்பு அழிக்கப்பட்டு வருவதாக சில தரப்பினர் எழுப்பிய குற்றச்சாட்டு அர்த்தமற்றது எனவும், ஊழியர் சேமலாப நிதியத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான வட்டியை விட 9 சதவீதத்திலிருந்து

2

# பொருளாதார நெருக்கடி காரணமாக 3 - 21 வயதுக்குட்பட்ட 54.9 வீதமான மாணவர்களின் பாடசாலைக் கல்வி பாதிப்பு!

## இலங்கை மத்திய வங்கி அறிக்கையில் தெரிவிப்பு



பொருளாதார நெருக்கடி காரணமாக 3 - 21வயதுக்குட்பட்ட 54.9 வீதமான பாடசாலை மாணவர்களின்பாடசாலைக்கல்வி பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குடிசனத் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களத்தினால் மேற்கொளப்பட்ட கணக்கெடுப்பின் முடிவுகளை மேற்கோள்காட்டி மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சூழலைக் கருத்தில் கொண்டு, மாணவர்கள் பாடசாலையிலிருந்து வெளியேறுதலை குறைப்பதற்கும், தரமான கல்வியைப் பெற வழிவகை செய்வதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. கல்வித் துறை வழமையான நிலைக்குத் திரும்பியுள்ள போதிலும், நாட்டில் கடந்த காலங்களில் நிலவிய நெருக்கடி

2

# ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கும் வரையில் வேட்பாளர் குறித்து மௌனம் - ஆளும் தரப்பு இணக்கம்!

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி அல்லது அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வேறு எந்தக் கட்சியும் தமது ஜனாதிபதி வேட்பாளரை குறிப்பிடுவதில்லை எனவும், தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதித் தேர்தலை முறைப்படி அறிவிக்கும் வரை அது தொடர்பில் கருத்து வெளியிடுவதில்லை எனவும் தீர்மானித்துள்ளன.

25 ஆம் திகதி இரவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற ஆளும் கட்சி உறுப்பினர்களின் விசேட கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் பிரதமர் தினேஷ் குணவர்தன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளனர். இதன்படி

2

# அமெரிக்க ஆய்வுக் கப்பலுக்கு இலங்கை வர அனுமதி மறுப்பு!

அமெரிக்க பல்கலைக்கழக மாணவர்கள் குழுவொன்றை ஏற்றிச் செல்லும் ஆய்வுக் கப்பலை இலங்கை கடற்பரப்பிற்குள் பிரவேசிக்க அனுமதிப்பதில்லை என இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கைக் கடற்பரப்பிற்குள் எந்தவொரு ஆய்வுக் கப்பலையும் பிரவேசிக்க அனுமதிப்பதில்லை என அரசாங்கம் எடுத்துள்ள கொள்கை ரீதியிலான தீர்மானத்திற்கு அமையவே மேற்படி கப்பலை இலங்கை கடல்

2

## ஈஸ்டர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஈஸ்டர் தற்கொலைத் தாக்குதல் மூன்று தேவாலயங்களிலும் நட்சத்திர ஹோட்டல் ஒன்றிலும் நடைபெற்றது. இதில் முந்நூறுபேர்வரை உயிரிழந்தனர். ஐநூறுபேர் வரை படுகாயமடைந்தனர். இது கடந்த ஐந்தாண்டுகளாக கொழும்பு அரசியல் தளத்தில் பேசுபொருளாக உள்ளது.

இதுவரை விசாரணை அறிக்கை வெளிவர வில்லை. இந்த விடயம் தொடர்பில் அண்மையில் நாடாளுமன்றத்தில் மூன்று நாட்கள் விவாதமும் நடைபெற்றுள்ளது.

மூன்றாம் நாள் (27.04.2024) விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ஜி.எல். பீரிஸ் அவர்களே, தாங்கள் - உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் உள்ளக விசாரணைகள் மீது கத்தோலிக்க மக்களுக்கோ நாட்டின் ஏனைய மக்களுக்கோ நம்பிக்கை கிடையாது.

விசாரணைகளுக்கு சர்வதேச ஒத்துழைப்பும் சர்வதேச தரப்பின் கண்காணிப்பும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். சர்வதேச ஒத்துழைப்புடன் விசாரணைக்கான விசேட பொறிமுறை ஸ்தாபிக்கப்பட வேண்டும். விசாரணை பூரணமாக அமைய வேண்டும்.

சர்வதேச ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வது ஒன்றும் புதிதல்ல. முன்னர் உதலாகம ஆணைக்குழு விசாரணைகளில் இந்தியாவின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டது.

1948ஆம் ஆண்டு 14ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் விசேட பொறிமுறை வகுக்கப்பட வேண்டும்!, என்ற மிக முக்கியமான கருத்துகளை தெரிவித்துள்ளீர்கள்.

நீதியை நிலைநாட்ட தாங்கள் துணிச்சலுடன் தெரிவித்த இக்கருத்துக்களுக்கு தமிழினம் தலைவணங்குகிறது. உலகப் பிரசித்திபெற்ற ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் கலாநிதி பட்டம் பெற்றவர் நீங்கள். பலநூறு மாணவர்களுக்கு சட்டம் கற்பித்தவர் நீங்கள்.

சட்டத்தின் மூல தத்துவங்களில் முக்கியமானது - சட்டம் அனைவருக்கும் சமம் மற்றும் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதுடன் தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதி என்பதையும் நாம் சொல்லி நீங்கள் அறிய வேண்டியதில்லை.

முந்நூறுபேர் கொல்லப்பட்டு ஐநூறுபேர் படுகாயமடைந்த தாக்குதலுக்கு நீதி கோரி தாங்கள் தெரிவித்த மேற்படி கருத்துகளின் மூலம் இந்த நாட்டில் உள்ளக விசாரணைகள் மீது மக்களுக்கு நம்பிக்கை கிடையாது. சர்வதேச கண்காணிப்பின்கீழ் சர்வதேச ஒத்துழைப்புடனான விசாரணை அவசியம் என்பதை தாங்கள் அடித்துச் சொல்லியிருக்கிறீர்கள்.

இதிலிருந்து, பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட இலங்கையர் எவருமற்ற நடுநிலையான சர்வதேச விசாரணைக்குழு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆதாரங்களைப் பகுப்பாய்வு செய்து யுத்தத்தில் சம்பந்தப்படாத நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டார்கள் என்றும் மேலும் பல்லாயிரம் பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என்றும் வெளிப்படுத்திய அறிக்கையையும் அதுபற்றிய பூரண விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 30 இன் கீழ் 1 தீர்மானத்தையும் அதன் பிரகாரம் சர்வதேச நீதிபதிகள், வழக்குரைஞர்கள், வழக்குத் தொடுநர்கள் ஆகியோரை இணைத்து போர்க்குற்றம் மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்ற தீர்மானத்தையும் - இவை இலங்கையின் இறையாண்மையை மீறும் செயல் என்றும் இலங்கையில் சிறந்த நீதித்துறை உண்டு. உள்நாட்டுப் பொறிமுறை மூலம் நாம் எமது பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வோம்!, என்றும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை வரம்புமீறி செயற்படுகிறது என்றும் மூர்க்கமாக எதிர்த்த நீங்கள் இன்று மனம் திருந்தி அத்தீர்மானங்களை ஏற்றுக்கொண்டுவிட்டீர்கள் என்று நாம் நம்புகின்றோம்.

எனவே உயிர்த்த ஞாயிறன்று பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்க தாங்கள் கூறிய அதே அடிப்படையில் பாதிக்கப்பட்ட பல்லாயிரம் தமிழ் மக்களுக்கும் நீதி வழங்க ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கலப்புப் பொறிமுறை விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதை நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்துவதன் மூலம் பல்லாயிரம் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதாலும் பல்லாயிரம்பேர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதாலும் பாதிக்கப்பட்டுள்ள இலட்சக்கணக்கான தமிழ் மக்களுக்கும் நீதி கிடைக்க நாடாளுமன்றத்தில் பேசி வழியேற்படுத்துவீர்கள் என நம்புகின்றோம்.

தமிழினத்திற்கு நீதிகோரும் தங்களது நாடாளுமன்ற உரையை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம் என்றார். (01)

## வேலைவாய்ப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வலியுறுத்தி வடக்கு மாகாண ஆளுநர் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றையும் அவர்கள் அனுப்பி வைத்தனர். அதேபோன்று இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி அரசியல்வாதிகளுக்கும் அந்த மகஜரின் பிரதிகளை அனுப்பி வைக்கவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். தமது கோரிக்கைகளை அரசு விரைந்து நிறைவேற்ற வேண்டும் என்றும், இல்லையேல் தொடர்ந்தும் தாம் பாரிய போராட்டங்களை நடத்து வோம் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (அ)

## மைத்திரிபால....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பில் ஆராய ஐந்து பேர்கொண்ட குழுவொன்றை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் புதிய பதில் பொதுச் செயலாளரான, நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார். முன்னாள் தலைவர் தன்னிச்சையாக வழங்கிய ஆசன அமைப்பாளர் பதவிகள் குறித்தும் இந்த குழுவில் ஆராயப்படவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

குறித்த குழுவில் அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, வீரகுமார திஸாநாயக்க மற்றும் பைசர் முஸ்தபா ஆகியோர் இடம்பெற்றுள்ளதுடன், குழுவின் தலைவர் பதவியை தாம் வகித்து வருவதாகவும் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் குழுவே இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ரெசி-127 )

## ஊழியர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

13 சதவீதமாக அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் விளக்கமளித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், "நாட்டிலுள்ள மிகப்பெரிய நிதியம் ஊழியர் சேமலாப நிதியமே எனவும், ஊழியர் சேமலாப நிதியத்தில் தற்போது இருபத்தி ஏழு லட்சம் உறுப்பினர்கள் உள்ளதாகவும், கடன் மறுசீரமைப்பின் போது ஊழியர் சேமலாப நிதியத்துடன் தொடர்புடைய கடன்களினால் ஊழியர் சேமலாப நிதியத்தின் வைப்பில் அது தாக்கத்தை ஏற்படுத்தப் போவதாகவும் சிலர் நாடாளுமன்றத்தில் கூச்சலிட்டிருந்தனர், ஆனால் அரசாங்கம் இதற்கு நியாயமான தீர்வினை வழங்கியுள்ளது" என்றார்.

அவ்வாறான குற்றச்சாட்டுகளை முன்வைத்தவர்களில் பெரும்பாலானோர் தற்போது மௌனமாக இருப்பதாகவும், 2023ஆம் ஆண்டுக்கான ஊழியர் சேமலாப நிதியத்தில் முதலீடு செய்து ஈட்டிய பணத்தில் 13 வீதத்தை செலுத்த அரசாங்கம் தீர்மானித்திருப்பது உறுப்பினர்களுக்கு நல்ல செய்தியாக அமையும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ரெசி-129)

## பொருளாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சூழ்நிலையினால் கல்வி முறைகளில் ஏற்பட்டுள்ள கடுமையான முரண்பாடுகளுக்கு உரிய தீர்வுகள் இன்னும் காணப்படவில்லை எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ரெசி-131)

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்வரும் ஜுலை மாதம் வரை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளினதும் ஒத்துழைப்புடன் முன்னெடுக்க இணக்கம் காணப்பட்டது.

எனினும், ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் தனித்தனியாக மே தின பேரணிகளை நடத்த இணக்கம் கண்டுள்ளன. அதன்படி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா, சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன மே 1 ஆம் திகதி தனித்தனியாக மே தின பேரணிகளை நடத்த தீர்மானித்துள்ளன.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் குறித்து, இந்தியா, சீனா மற்றும் அமெரிக்கா ஆகியஸ் நாடுகள் வழமையை விட அதிக கவனம் செலுத்தி வருவதாக இலங்கையிலுள்ள அந்நாடுகளின் தூதுவர்கள் இலங்கையின் பிரதான அரசியல் கட்சிகளின் தலைவர்களிடம் கூறியுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (ரெசி-126 )

## அமெரிக்க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பரப்பிற்குள் அனுமதிப் பதில்லை என முடிவெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடல் எல்லையை பயன்படுத்தாமல், எரிபொருள் நிரப்பல், நீர் தேவைகள், சுத்தம் செய்தல், உணவு போன்ற வசதிகளுக்காகவே இலங்கை கடற்பரப்பியுற்குள் பிரவேசிக்க அமெரிக்க ஆய்வுக் கப்பல் அனுமதி கோரியுள்ளதனை கவனத்திற் கொண்டு, சர்வதேச கடற்பரப்பிற்குச் சென்று மேற்படி கப்பலுக்கு உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதென அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக கூறப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட அமெரிக்க கப்பல் சென்னை துறைமுகத்திற்குள் நுழைய அனுமதி கோரியதாகவும், அவர்கள் அதற்கு அனுமதி வழங்கவில்லை எனவும் கூறப்படுகின்றது. இதேபோல், சீனாவின் ஆய்வுக் கப்பலொன்று இலங்கைக்குள் நுழைய வேண்டும் என்ற கோரிக்கை முன்னதாக இலங்கையால் நிராகரிக்கப்பட்டது எனவும் அரசாங்க தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரெசி-128)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# தம்பிலுவில் எதிரொளி மைதானத்தில் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா





(வி.ரி.சகாதேவராஜா)

தம்பிலுவில் சமுர்த்தி வங்கியின் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா தம்பிலுவில் எதிரொளி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

விநாயகபுரம் சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ். சதிஸ் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் கலந்து சிறப்பித்தார். சமுர்த்தி பிரிவின் தலைமைபீட முகாமையாளர் எம்.அரசரெத்தினம் முகாமைத்துவ பணிப்பாளர் பி.கமலேஷ்வரன் விநாயகபுரம் சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.சசிகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மேலும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வலய வங்கி உதவி முகாமையாளர்கள், வங்கி வலய கள உத்தியோகத்தர்கள், திட்ட உதவியாளர், சமூர்த்தி தலைமை காரியாலய ச.அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச மட்ட , வங்கி க.பா.சபைத் தலைவர்கள், வர்த்தக.ச.தலைவர் உறுப்பினர்கள், சமுர்த்தி உற்பத்தியாளர்கள், ச.வங்கி வாடிக்கையாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## திருமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தினால் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட உதவிகள்

(ஹஸ்பர் ஏ.எச்)

பெண்கள்தலைமைதாங்கும்குடும்பங்களுக்கு வருமானம் தரும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கும் நோக்கோடு திருகோணமலை மாவட்ட நலன்புரிச்சங்கமானது திட்டமொன்றினை முன்னெடுத்து வருகிறது.

அதன்படி, நான்கு குடும்பங்களைத் தெரிவுசெய்து, குடும்பம் ஒவ்வொன்றிற்கும் ஒன்றரை இலட்சம் பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம், குழாய்கள் மற்றும் தூவல் நீர் பாசனக் கருவிகளை இம்மாதத்தில் இரண்டாவது முறையாக இன்று வழங்கியது.

இவற்றை திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் திருகோணமலையில் வைத்து வழங்கி வைத்தார்.






## சம்மாந்துறையில் மாபெரும் பாரம்பரிய கலை விழா - இன நல்லிணக்க நிகழ்வு!




(எம்.எம்.றம்ஸீன்)

கிழக்கு இளைஞர்கள் அமைப்பு, றிஸ்லி முஸ்தபா கல்வி அபிவிருத்தி அமைப்பு மற்றும் மைஓன் நிறுவனத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் பாரம்பரிய கலை நிகழ்வு சம்மாந்துறை பொது மைதானத்தில் கிழக்கு இளைஞர்கள் அமைப்பின் தலைவர், முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் தானீஸ் ரஹ்மத்துல்லாஹ் தலைமையில் நடைபெற்றது.


இந்நிகழ்வில் பிரதம அதிதியாக றிஸ்லி முஸ்தபா கல்வி அபிவிருத்தி அமைப்பின் தலைவர், மயோன் நிறுவனத்தின் பணிப்பாளர் றிஸ்லி முஸ்தபா கலந்து சிறப்பித்தார். கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக்கும், சிறப்பு அதிதிகளாக சம்மாந்துறை பிரதேச கலாசார உத்தியோகத்தர் றஸ்மி மூஸா, றிஸ்லி முஸ்தபா கல்வி அபிவிருத்தி அமைப்பின் செயலாளர், திடீர் மரண விசாரணை அதிகாரி ஏ.எச்.அல்-ஜவாஹிர், சம்மாந்துறை கோரைக்கார் தமிழ் மகா வித்தியாலய அதிபர் எஸ்க.எலங்கோபன், கவிதாயினி டொக்டர் ஜெலீலா முஸம்மில், மற்றும் கலை மன்றங்களின் தலைவர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# அதிகரிக்கும் ஏஐ பயன்பாடுகள்
# இலங்கையும் சவாலுக்குத் தயார்!




நதாஷா ஸ்டீவன்
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வளர்ந்து வரும் இளைய தலைமுறையின் அறிவாற்றலும் செயல் திறனும் அதிகரித்து வருவது போலவே தற்போதைய ஐந்தாம் தலைமுறை தொலைத் தொடர்பு தொழிநுட்பம், கணினி, அதனால் இயக்கப்படும் இயந்திர மனிதன், போன்றவைகளின் பணிகள் மற்றும் பயன்கள் மேலாதிக்கம் பெற்று வருகின்றன.



நாம் பேசும் மொழியை புரிந்து கொண்டு அக்கட்டளையை செயல்படுத்தக் கூடிய கைப்பேசி வசதிகள், வழிகாட்டும்வரைபடங்கள், கணினிக் கட்டுப்பாட்டால் இயக்கக் கூடிய ஓட்டுநரில்லா வாகனங்கள் மற்றும் பல தானியங்கி கருவிகள் போன்றவைகள் எல்லாம் கணினி மென்பொருள் செயல்பாடுகளினால் கிடைக்கப் பெற்றவை.

எதிர்காலத்தில் மனிதனின் பணிகளை எளிமைப்படுத்தி சிறப்பாகச் செய்யக்கூடிய மாதிரி இயந்திர வடிவங்களின் ஆட்சியில் உலகம் சுழலும் என்றால் அது மிகையாகாது.

கணினித் துறையில், வருங்காலத்தில் உலக அளவில் அதிகமான வேலை வாய்ப்புகளை அளிக்கக் கூடிய துறையாக செயற்கை நுண்ணறிவுத் துறை விளங்கும். இதன் மூலம் மனிதனைப் போன்று அல்லது மனிதர்களை விட சிந்திக்கும் மற்றும் செயல்படக் கூடிய அறிவுத் திறன் கொண்ட கணினிப் பொறிகளை உருவாக்குவதே இத்துறையின் நோக்கமாகும்.

இத்துறை – மனிதனின் பகுத்தறியும் திறனடிப்படையில், கற்றல், பகுத்தாய்தல், திட்டமிடல், உணர்தல், உள்ளுணர்தல், பார்த்தல், கேட்டல் ஆகிய பண்புகளைக் கொண்டு சூழ்நிலைக்கேற்ப முடிவுகள் மேற்கொண்டு செயல்படுத்தக் கூடிய ஒரு பணியினை கணினியினைக் கொண்டு செய்து முடிக்க இயந்திரங்களை உருவாக்குவதாகும். எனவே, இத்துறை அனைவரின் கவனத்தையும் ஈர்த்து வருவதில் ஆச்சரியமில்லை.

இத்துறை வளர்ச்சியடைந்து முழு வெற்றி பெற்று விட்டால் மனிதன் சென்று வேலை செய்ய முடியாத இடங்களிலெல்லாம் கூட இயந்திர வடிவங்களைக் கொண்டு அவ் வேலைகளைச் செய்து முடிக்கலாம். அவை விண்வெளியாகவோ அல்லது காற்று மாசடைந்த இடமாகவோ இருக்கலாம். 'செயற்கை நுண்ணறிவு (ஏஐ) உலகெங்கிலும் உள்ள தொழில்களை வேகமாக மாற்றுகிறது - இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல!'

தொழிநுட்பத்தின் முன்னேற்றங்கள் மற்றும் டிஜிட்டல் வளங்களுக்கான அணுகலை அதிகரிப்பதன் மூலம், இலங்கை ஏஐ பயனர்கள் இந்த அதிநவீன தொழிநுட்பத்தை - புதுமைகளை உருவாக்குவதற்கும் பல்வேறு சவால்களை எதிர்கொள்வதற்கும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

ஏஐ குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கிய துறைகளில் ஒன்று சுகாதாரம் ஆகும். இலங்கை ஏஐ பயனர்கள் மருத்துவத் தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்கும், நோய்களைக் கண்டறிவதற்கும் மற்றும் நோயாளியின் விளைவுகளைக் கணிக்கவும் இயந்திர கற்றல் வழிமுறைகளை மேம்படுத்துகின்றனர்.

இது சுகாதாரச் சேவைகளின் துல்லியம் மற்றும் செயல்திறனை மேம்படுத்தியது மட்டுமல்லாமல் சிறந்த நோயாளிப் பராமரிப்பு மற்றும் நிர்வாகத்திற்கும் பங்களித்துள்ளது.

வணிகத் துறையில், நிறுவனங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதில் ஏஐ புரட்சியை ஏற்படுத்துகிறது.

வாடிக்கையாளர் சேவையைத் தன்னியக்கமாக்கல், முடிவெடுப்பதற்கான முன்கணிப்புப் பகுப்பாய்வு மற்றும் விநியோகச் சங்கிலி மேம்படுத்தல் போன்ற பணிகளுக்கு ஏஐ இயங்கும் தீர்வுகளை இலங்கை வணிகங்கள் ஏற்றுக்கொள்கின்றன.

ஏஐ இன் இந்தத் தத்தெடுப்பு உற்பத்தித்திறனை மேம்படுத்துகிறது, செலவுகளைக் குறைக்கிறது. அத்தோடு உலகளாவிய சந்தையில் வணிகங்கள் போட்டித்தன்மையுடன் இருக்க உதவுகிறது.

ஏஐ இலங்கைப் பயனர்களால் ஏற்றுக்கொள்ளப்படும் மற்றொரு பகுதிக் கல்வியாகும்.

ஏஐ-உந்துதல் கற்றல் தளங்கள் கல்வி அனுபவங்களைத் தனிப் பயனாக்குகின்றன. மாணவர்களுக்குத் தேவையான உள்ளடக்கம் மற்றும் கருத்துக்களை வழங்குகின்றன. இந்த அணுகுமுறையானது கற்றல் விளைவுகளை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், பலதரப்பட்ட மாணவர் மக்களுக்கு உயர்தரக் கல்வியை வழங்குவதில் ஆசிரியர்களுக்கும் ஆதரவளிக்கிறது.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு இன்றியமையாத துறையான விவசாயத்தில் ஏஐ முக்கிய பங்கு வகிக்கிறது. ஏஐ பயன்பாடுகள் பயிர் கண்காணிப்பு, மகசூல் கணிப்பு மற்றும் பூச்சி மேலாண்மை ஆகியவற்றிற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இது விவசாயிகளுக்கு தரவு சார்ந்த முடிவுகளை எடுக்க உதவுகிறது. அத்துடன் விவசாய உற்பத்தியை நிலையானதாக மேம்படுத்துகிறது.






இலங்கை அரசாங்கமும் ஏஐ இன் ஆற்றலை அங்கீகரித்து பல்வேறு துறைகளில் ஏஐ தத்தெடுப்பை மேம்படுத்துவதற்கான முயற்சிகளில் முதலீடு செய்து வருகிறது. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதியளிப்பது, ஏஐ தொழிநுட்பங்கள் குறித்த பயிற்சி மற்றும் கல்வியை வழங்குதல், ஏஐ கண்டுபிடிப்பு மற்றும் தொழில் முனைவோருக்கு ஆதரவளிக்கும் கொள்கைகளை உருவாக்குதல் ஆகியவை இதில் அடங்கும்.

எவ்வாறாயினும், தரவுத் தனியுரிமை, நெறிமுறைகள் மற்றும் திறன் இடைவெளிகள் போன்ற சவால்கள் உள்ளன. மேலும் இலங்கை ஏஐ பயனர்களது ஒத்துழைப்பு, கல்வி மற்றும் ஒழுங்குமுறைக் கட்டமைப்புகள் மூலம் இந்த சிக்கல்களைத் தீர்க்க தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றனர்.

ஒட்டுமொத்தமாக, இலங்கையில் வளர்ந்து வரும் ஏஐ பாவனையாளர்களின் சமூகம் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்துவதோடு, நாட்டின் டிஜிட்டல் மாற்றப் பயணத்திற்கும் பங்களிக்கிறது.

தொடர்ச்சியான முதலீடு, ஒத்துழைப்பு மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றுடன், ஏஐ இன் முழுத் திறனையும் பயன்படுத்தவும் மற்றும் பிராந்திய ஏஐ நிலப்பரப்பில் ஒரு தலைவராக மாறவும் இலங்கை தயாராக உள்ளது.



# ஆலையடிவேம்பு பிரதேச இளைஞர் கழக சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா

(எம்.ஏ.ஏ.அக்தார்)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் அனுசரணையில் தேசிய ரீதியில் ஸ்மார்ட் யுத் இளைஞர் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா தேசிய ரீதியில் இடம்பெற்றது.

ஆலையடிவேம்பு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று தம்மரெத்தின சிங்கள மகாவித்தியாலய மைதானத்தில் நேற்று பிற்பகல் வேளையில் இந்த ஸ்மார்ட் யுத் இளைஞர் சித்திரை புத்தாண்டு விளையாட்டு விழா நடைபெற்றது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் த.கஜேந்திரனின் ஆலோசனைக்கு அமைய இளைஞர் சேவை அதிகாரி என்.ஜெயராஜ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுகளில் இளைஞர் சேவை மன்றத்தின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் எச்.யு.சுசந்த பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

நிகழ்வில் மாவட்ட உதவிப்பணிப்பாளர் யு.எல்.மஜீட் மற்றும் இளைஞர் சேவை மன்றத்தின் பொறுப்பதிகாரி ஏ.ஹமீர் மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச செயலக கிராம நிருவாக அலுவலர் பரிமளவாணி சில்வெஸ்டர் இளைஞர் சேவை மன்ற உறுப்பினர்கள் யங் பிளவர்ஸ் விளையாட்டு கழகத்தினர் பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்விற்கு வருகை தந்த பிரதம அதிதி போட்டி நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்.

வழுக்கு மரம் ஏறுதல், தலையணைச்சமர், முட்டி உடைத்தில், கிடுகிழைத்தல், சாக்கோட்டம், சமநிலை ஓட்டம், தேங்காய் துருவுதல், முட்டை மாற்றுதல், தொப்பி மாற்றுதல், வினோத உடைப்போட்டி என பல்வேறு பாரம்பரிய கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கான ஊடகக் கல்வியறிவுப் பயிற்சி



(சியாத்.எம்.இஸ்மாயில்)

இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனத்தின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்டத்திலுள்ள சிவில் சமூக பிரதிநிதிகளுக்கான “ஊடக கல்வியறிவு” பயிற்சிப் பட்டறை நிந்தவூர் தோம்புக்கண்ட ஓய்வு விடுதியில் இன்று நடைபெற்றது

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் பயிற்சி இணைப்பாளரும் மற்றும் பயிற்றுவிப்பாளருமான கீர்த்திகா மகாலிங்கத்தின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இப்பயிற்சிப் பட்டறையில் பிரதான வளவாளராக விடி வெள்ளி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எம்.பி.எம். பைறூஸ் கலந்து கொண்டு விரிவுரைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் பத்திரிகை ஸ்தாபனத்தின் உதவி இணைப்பாளர் ஆர்.அபிஷேக் மற்றும் அம்பாறை மாவட்டத்தில் உள்ள சிவில்சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்



# கனமூலை சேகு அலாவுதீன் வி.க. ஏற்பாட்டில் நோன்புப் பெருநாள் விளையாட்டு போட்டி

(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)

கனமூலை சேகு அலாவுதீன் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்த விளையாட்டுப் போட்டி நேற்று (28) கனமூலை எம்.எஸ். சேகுஅலாவுதீன் பொது விளையாட்டு மைதானத்தில், முன்னாள் கற்பிட்டிப் பிரதேச சபைத் தலைவர் எம்.எஸ்.சேகு அலாவுதீன் தலைமையில் இடம்பெற்றது.

நோன்புப் பெருநாளை சிறப்பிக்கும் வகையில் ஏற்பாடு செய்த இவ்விளையாட்டுப் போட்டியில் சிறுவர்களுக்கான துவிச்சக்கர வண்டி ஓட்டம், முட்டி உடைத்தல், றுக்கு மரம் ஏறுதல், பாய் இழைத்தல், முச்சக்கர வண்டி ஓட்டம், மோட்டார் சைக்கிள் ஓட்டங்கள் போன்ற இன்னும் பல நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம், முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் ஏ.எச்.எம். ரியாஸ், ஐக்கிய தேசிய கட்சியின் புத்தளம் மாவட்ட அமைப்பாளர் ஜேசுதாஷன், முந்தல் - மதுரங்குளி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஏ.எச்.எம்.ஹாறூன் உள்ளிட்ட மற்றும் பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

# தேசிய கணித ஒலிம்பியாட் போட்டியில் திறமைகாட்டிய மாணவனுக்கு கௌரவிப்பு






(வி.ரி.சகாதேவராஜா)

தேசிய கணித ஒலிம்பியாட் போட்டியில் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி மாணவன் பிரதீபன் கேசித் தெரிவாகி சாதனை படைத்துள்ளார்.

பாண்டிருப்பை சேர்ந்த குறித்த மாணவன் கேசித், கடந்த புலமைப் பரிசில் பரீட்சையில் 170 புள்ளிகளைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தேசிய ஒலிம்பியாட் கணித விஞ்ஞானப் போட்டியில் தேசிய மட்டத்திற்கு பங்குபற்றிய மாணவர்களையும் மற்றும் தேசிய ஒலிம்பியாட் குழுவிற்கு தெரிவு செய்யப்பட்டிருக்கும் மாணவன் பிரதீபன் கேசித்தையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை கல்லூரியில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் அருட்சகோதரர் ச.இ.றெஜினோல்ட் தலைமையில் குறித்த நிகழ்வு நடைபெற்றது.

# மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் இந்திய உயர்ஸ்தானிகருடன் விசேட சந்திப்பு

## இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும் ஆராய்வு!

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோருக்கு இடையில் விசேட சந்திப்பொன்று கடந்த வியாழக்கிழமை (25) இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலின் போது, பொருளாதார நெருக்கடியில் இலங்கை மூழ்கியிருந்த காலகட்டத்தில், இந்தியா வழங்கிய விலைமதிப்பற்ற ஆதரவிற்கு மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்ததுடன், வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில், போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 50,000 வீடுகளை வழங்கியமைக்காகவும் அவர் தனது பாராட்டுக்களை தெரிவித்தார்.



மேலும், கிழக்கு மாகாணத்தில், குறிப்பாக நிந்தவூர், ஒலுவில், காரைதீவு, மாளிகைக்காடு, பாண்டிருப்பு, மருதமுனை மற்றும் கல்முனை போன்ற பிரதேசங்களில், அதிகரித்து வரும் கடலரிப்பினால், பாதிக்கப்பட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் சவால்களுக்கு உடனடியாக தீர்வுகாண வேண்டியதன் அவசியத்தையும் அவர் எடுத்துரைத்ததுடன், எதிர்வரும் நாட்களில் கிழக்குக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவிடம், குறித்த விடயங்களை கருத்திற்கொண்டு, மேற்படி பிரதேசங்களில் கடலரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கும் மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கும் தேவையான உதவிகளை, இந்திய அரசின் நிதி பங்களிப்பினூடாக பெற்றுத்தருமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

மேலும், வடக்கில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிலையான வாழ்வாதார வசதிகளை வழங்குவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அவர், இந்த இலக்கை அடைவதற்கு இந்திய அரசின் உதவிகளை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நெருக்கமான உறவுகளை வலுப்படுத்துவதையும் பரஸ்பர ஒத்துழைப்பை பேணுவதையும் நோக்காகக்கொண்ட இக்கலந்துரையாடலில், தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையிலான படகுச் சேவையை மீள ஆரம்பிப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களின் அபிவிருத்தி உள்ளிட்ட இன்னும் பல முக்கிய விடயங்கள் தொடர்பில் இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

இந்த சந்திப்பின் போது, மக்கள் காங்கிரஸ் தவிசாளரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம்.எஸ்.எஸ்.அமீர் அலி அவர்களும் கலந்துகொண்டு, மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்திகள் சம்பந்தமாக ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# நாவிதன்வெளி பிரதேச செயலகம் நடாத்திய சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலகம் என்பன ஒன்றிணைந்து பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்துடன் இணைந்து நடாத்திய சித்திரை புத்தாண்டு விளையாட்டு விழா நேற்று (28) றாணமடு இந்து கல்லூரி மைதானத்தில் பிரதேச செயலாளர் ஆர். ராகுலநாயகி சஜிந்திரன் தலைமையில் நடைபெற்றது.

ஸ்மார்ட் யூத் - இளைஞர் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழாவாக நடைபெற்ற இந்த நிகழ்வுகளுக்கு அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு விளையாட்டு விழாவினை ஆரம்பித்து வைத்தார்.

பாரம்பரிய புத்தாக்க பண்பாட்டுக் கலை கலாசாரங்களை பிரதிபலிக்கும் விளையாட்டு விழாக்கள் இங்கு நடைபெற்றன. இதில் சிறுவர்கள், முதியவர்கள், இளைஞர்கள், ஆண்கள், பெண்கள் என பல பிரிவினருக்கும் போட்டிகள் வெவ்வேறாக நடத்தப்பட்டன. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு அதிதிகளினால் பரிசுகள் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டதுடன் பிரதேச மட்ட விளையாட்டு போட்டி நிகழ்ச்சிகளில் மாவட்ட மட்டத்தில் வெற்றி பெற்று மாகாண மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் இங்கு மாலை அணிவிக்கப்பட்டு நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருக்கு நாவிதன்வெளி பிரதேச செயலகத்தினால், தனது சேவையை பாராட்டி மாலை அணிவிக்கப்பட்டு, பொன்னாடை போர்த்தி, பாராட்டு பத்திரம் நினைவுச் சின்னமாக வழங்கி கௌரவிக்கப்பட்டன

இந்த விழாவில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாகாணப் பணிப்பாளர் எச்.யூ.சுசன்ந்த, நாவிதன்வெளி உதவி பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன், கால்நடை வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எம். ஜிப்ரி, மத்திய முகாம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஐ.எல்.ஏ.கபூர் நாவிதன்வெளி அன்னமலை இராணுவ முகாம் பதில் கட்டளை அதிகாரி ராணுக்க ரணவீர, பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி திலகராணி கிருபைராஜா, தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தின் அம்பாறை மாவட்ட உத்தியோகத்தர் கமல் நிஷாந்த, மத்தியமுகாம் றாணமடு இந்துக் கல்லூரி அதிபர் கே. கதிரைநாதன், பிரதேசசபை செயலாளர்பி. சதீஸ்கரன், இளைஞர்சேவைகள் மன்றத்தின் சாய்ந்தமருது அலுவலக பொறுப்பதிகாரி எ.அமீர், சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் எஸ். சிவம், விளையாட்டு உத்தியோகத்தர் பி.வசந்த், இளைஞர் சேவை உத்தியோகத்தர் எஸ். ராதிந், பிரதேச செயலக விளையாட்டு கழகங்கள், இளைஞர் கழகங்கள், பொதுமக்கள், மாணவர்கள் என பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.






# தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பதவிக்கு மூவரின் பெயர்கள் பரிந்துரை!

(கே எ ஹமீட்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பதவிக்கு மூவரை பரிந்துரை செய்வதற்கான விசேட பேரவை ஒன்றுகூடல் இன்று பேராசிரியர் கொலின் என் பீரிஸ் தலைமையில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கொழும்பில் உள்ள கல்வித் திட்ட மையத்தில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 03ஃ2023 ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் கோரப்பட்டுள்ளதன் அடிப்படையில் பேரவை உறுப்பினர்கள், விண்ணப் பதாரிகளுக்கு ஏழு அளவுகோல்களின் கீழ் புள்ளிகள் இட்டு, பெற்ற அதிகூடிய புள்ளிகள் அடிப்படையில் மூவரை தெரிவு செய்தனர்.

இதன் அடிப்படையில் முதலாவதாக தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரும், இரண்டாவதாக பேராசிரியர் ஏ.எம். றஸ்மியும், மூன்றாவதாக பேராசிரியர் எப். ஹன்ஸியா றவூப்பும் அதிக புள்ளிகள் அடிப்படையில் பேரவையால் பரிந்துரை செய்யப்பட்டனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் முதலாவது பதவிக்காலம் எதிர்வரும் 2024.08.09 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில் குறித்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்துக்கமைய பல்கலைக்கழக பேரவையின் சார்பில் பதில் பதிவாளர் எம்.ஐ.எம். நௌபர் விண்ணப் பங்களுக்கான அழைப்பை கடந்த 2024.02.08 ஆம் திகதி விடுத்திருந்தார்.

அதன் அடிப்படையில் தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பேராசிரியர் எப். ஹன்ஸியா றவூப், பேராசிரியர் ஏ.எம். றஸ்மி, பேராசிரியர் எஸ்.எம். ஜ/னைடீன், பேராசிரியர் எம்.வி.எம். இஸ்மாயில், பேராசிரியர் ஏ.எம். முஸாதிக் மற்றும் கலாநிதி ஏ.சி.எம். ஹனஸ் உள்ளிட்ட ஏழுபேர் விண்ணப்பித்திருந்தனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பதவிக்கு இம்முறை தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மாத்திரமே விண்ணப்பித்திருந்தனர். பல்கலைக்கழகத்துக்கு வெளியேயிருந்து எவரும் விண்ணப்பிக்கவில்லை.

கடந்த 2021.08. 09 ஆம் திகதியன்று பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் ஐந்தாவது உபவேந்தராக நியமிக்கப்பட்டிருந்தார். இன்று தெரிவு செய்யப்பட்டுள்ள குறித்த மூவரில் ஒருவரை ஜனாதிபதி ஆறாவது உபவேந்தராக நியமிப்பார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.04.2024இல் வெளியிடப்பெற்றது.